Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 16 திங்கட்கிழமை (01-09-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 265

# இளவரசி டயானா, நண்பர் டோடி பாரிஸில் கார் விபத்தில் மரணம்!

## பத்திரிகையாளர்கள் பின் தொடர்ந்த போது சுரங்கப் பாதையில் சம்பவம்



டயானா

பாரிஸ், செப். 1

பிரிட்டிஷ் இளவரசி டயானா பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் மரணமடைந்தார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த பின்னர் மருத்துவமனையில் அவரது உயிர் பிரிந்தது.

அவரது நண்பரான எகிப்திய கோடீஸ்வரர் டோடி அல் பெய்ட்டும் மற்றும் கார் சாரதியும் இந்த விபத்தில் கொல்லப்பட்டனர்.

டயானாவின் மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் கடும் காயங்களுடன் தப்பிவிட்டார். அவரது தலையிலும், முகத்திலும், மார்பிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை நேரப்படி அதிகாலை 4 மணிக்கு இந்த விபத்து இடம்பெற்றது.

இளவரசி டயானாவும் டோடி அல்பெய்ட்டும் பயணம் செய்த காரை பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்கள் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்றபோது விபத்து ஏற்பட்டது.

வெயில் நதியின் வடகரையில் உள்ள 'அல்மா' பாலத்தின் கீழுள்ள சுரங்கப்பாதை ஒன்றில் சென்று கொண்டிருந்த இவர்களுடைய மோட்டார் கார் சுவரொன்றில் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

இளவரசி டயானாவுக்கு சிகிச்சையளித்த சத்திர சிகிச்சைநிபுணர் தகவல் தருகையில், சத்திரசிகிச்சையின் பின்னர் சுவாசப்பையில் இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் இளவரசி மரணமடைந்தார் என்று தெரிவித்தார்.



டோடி

இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 10 மணிக்குச் சற்று முன்பதாக டயானா உயிரிழந்தார்.

இந்த விபத்தையடுத்து பிரெஞ்சுப் பொலீஸார்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயப் பூசகர் உட்பட நால்வர் கைது!

வவுனியா, செப். 1

திருகோணமலை தம்பலகாமம் கோயிலடிப் பகுதியை நேற்றுக் காலை சுற்றி வளைத்த படையினர் ஆலய பூசகர் உட்பட 4 பேரைக் கைது செய்தனர்.

கைதானவர்களில் இருவர் பெண்களாவர். (இ-164-3)

## குமண பருத்தித்துறை வந்தது

நெல்லியடி, செப். 1

கொழும்பிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் சுமார் 3 ஆயிரத்து 291 மெற்றிக் தொன் பொருள்களுடன் கடந்த சனிக்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில், தனியார் வர்த்தகர்களுக்கு ஆயிரத்து 685 மெற்றிக் தொன் சிமெந்து, 20 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு ஆகியவையும் எடுத்து வரப்பட்டுள்ளன.

அதேசமயம் யாழ். நகரில் இயங்கும் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு 200 மெற்றிக் தொன் சிமெந்தும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளது.

(இ-109)

## சடலத்தைப் பொறுப்பேற்க சார்ள்ஸ் பாரிஸ் சென்றார்

லண்டன், செப். 1

பிரிட்டிஷ் பட்டத்துக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தனது முன்னாள் மனைவியும் வேல்ஸ் இளவரசியுமான டயானாவின் சடலத்தைப் பொறுப்பேற்பதற்காக நேற்று இரவு பாரிஸ் சென்றடைந்தார்.

அடுத்த சில மணி நேரத்தில் அவர் சடலத்துடன் விசேட விமானம் ஒன்றில் லண்டன் திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் சிக்கிய டயானா

(7 ஆம் பக்கம் பார்க்க)

## டயானா மரணத்தில் மர்மம்?

கொழும்பு, செப். 1

பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாக சர்வதேச செய்தி ஏஜன்ஸிகள் தெரிவித்தன.

நிலக்கண்ணிகளைத் தடை செய்ய வேண்டும் என்று பிரசாரம் செய்து வந்ததால் அவர் மீது ஆயுத வியாபாரிகள் ஆத்திரம் கொண்டிருந்தார்கள் என்றும் —

இதன் காரணமாக இவர் மரணத்தில் மர்மம் நிலவுவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## இராணுவ மேஜர் உட்பட இருவர் நெடுங்கேணியில் கண்ணிக்கு பலி

கொழும்பு, செப். 1

நெடுங்கேணியில் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் இராணுவ மேஜர் ஒருவரும் படைவீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்த வாகனம் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. (இ-5)

## ஸ்ரிங்கர் மற்றும் சாம் ரக ஏவுகணைகள் புலிகளிடம்!

### புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு, செப். 1

விமானங்களைத் தாக்கக் கூடிய ஸ்ரிங்கர் மற்றும் சாம் ரக ஏவுகணைகள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கிடைத்து விட்டதாக புலனாய்வுத் தகவல்கள் உறுதி செய்துள்ளன என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(8ஆம் பக்கம் பார்க்க)

# சர்வஜனவாக்கெடுப்பு பெப்ரவரிக்கு முன்னர்

## அரசு தோற்றால் நாடாளுமன்றம் கலைப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 1

**அதிகாரப் பரவலாக்கல் யோசனை தொடர்பாக எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்கு முன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும். அதில் அரசு தோல்வி கண்டால் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் சமாதானத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த பின்னர் அமைச்சர்கள், அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு டிசம்பரில் அல்லது பெப்ரவரிக்கு முன்னர் நடத்தப்படும். இதில் அரசாங்கம் தோற்றால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும். எனது மனச்சாட்சிப்படி ஜனாதிபதி தேர்தலையும் நடத்துவேன்.

சர்வதேச அமைப்பு ஒன்று மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் அரசின் தீர்வுப் பொதிக்கு 54 சதவீத ஆதர

(7 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



[illegible]
குறுதிகளின் பட்டியலில் இதுவும் சேருமோ......!

### தெல்லிப்பழையில் அமைக்கப்படும்

## புனர்வாழ்வு முகாமுக்கு அதிகாரிகள் குழு விஜயம்

கொழும்பு, செப்.1

தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டுவரும் புனர்வாழ்வு முகாமை அதிகாரிகள் குழு ஒன்று நாளை பார்வையிடவிருக்கிறது.

படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் புனர்வாழ்வு அளிக்க வேண்டியவர்களைத் தங்கவைக்க இந்த முகாம் அமைக்கப்பட்டுவருகிறது.

நாளை வரும் அதிகாரிகள் குழு இந்த முகாமை எப்போது திறப்பது என்பது குறித்து ஆராயும். (இ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சாவகச்சேரி

அருள்மிகு

# ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

## மஹா கும்பாபிஷேக விழா

அன்புடையீர்!

**கிரியாரம்பம்: 30 - 08 - 97**
சனி காலை 8 மணி

**எண்ணெய்க்காப்பு: 04 - 09 - 97**
வியாழன் காலை 7 மணி – மாலை 5 மணி

**கும்பாபிஷேகம்: 05 - 09 - 97**
வெள்ளி காலை 6. 52-8. 04 மணி

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

[49281] சுபம்!



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மேலைப் புலோலி
சைவப்பிரகாச வித்தியாலயம்,
பருத்தித்துறை.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வு:–1995
தோற்றிறோர்– 20 சித்தியடைந்தோர்– 07

சித்தியடைந்தோர் விவரம்

| | | |
|---|---|---|
| செல்வி | V. வினோதிகா | — 153 புள்ளி |
| செல்வி | P. மேனுஜா | — 143 புள்ளி |
| செல்வி | R. தவச்செல்வி | — 127 புள்ளி |
| செல்வன் | S. ஐங்கரன் | — 123 புள்ளி |
| செல்வி | P. பிருசாந்தி | — 119 புள்ளி |
| செல்வி | B. றஜினி | — 113 புள்ளி |
| செல்வி | B. அசோதை | — 109 புள்ளி |

இவர்களுக்கும் இப்பாடசாலை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

வியாபாரி மூலை
ஐக்கிய நாணய சங்கம்

(49302)



## யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களுக்கான அறிவித்தல்

3ஆம்வருட 'A' பிரிவு மாணவர்களைத்தவிர ஏனைய அனைத்து வருட மாணவர்களினதும் ''Batch Photo 02 - 09 - 97 (செவ்வாய்க்கிழமை) அன்று பி. ப. 4-00மணிக்கு எடுக்கப்படவுள்ளது.' அனைத்து மாணவர்களும் தவறாமல் சமுகமளிக்கவும்.

செயலாளர்,
விஞ்ஞான பீட மாணவர்
ஒன்றியம்.

(49344)



# சுவாமி விவேகானந்தரின்
## இலங்கை விஜய
# நூற்றாண்டு விழா

**எழுச்சி மாதம்: 01-09-97 - 30-09-97**

'' எழுமின்! விழிமின்! கருதிய கருமம்
கை கூடுமட்டு உழைமின் ''

01-09-97 — ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
பி.ப. 1-30 மணி : ஆண்டு 11 மாணவர்களுக்கு வினாடி வினா.
03-09-97 — கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
பி.ப. 1-30 மணி : ஆண்டு 11 மாணவர்களுக்கு கருத்தரங்கும் புத்தகக் கண்காட்சியும்
05-09-97 = யாழ். இந்துக் கல்லூரி. புத்தகக் கண்காட்சி
20-09-97 — க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கருத்தரங்கும், சேவாச்சிரமம் நடத்திய வினாடி வினாப் போட்டிப் பரிசளிப்பும். நேரம் காலை 9 மணி.

குறிப்பு:- பரிசு பெறும் மாணவ மாணவிகளுக்கு நேரடியாகக் கடிதங்கள் அனுப்பப்படும்.

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.
பருத்தித்துறை. (சி/1426)


## கஞ்சா கடத்திய பொலீஸார்

பதுளை, செப். 1

விறகு லொறி ஒன்றில் 302 கிலோ கிறாம் நிறையுடைய 12 மூடை கஞ்சாவைக் கடத்திச் சென்ற இரு பொலீஸாருக்கு பதுளை மாவட்ட நீதிவான்6 ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனையும் 25ஆயிரம் ரூபா குற்றமும் விதித்தார். (இ–10)

## கப்பல் பயணிகளுக்கு

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இன்று கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை இன்று காலை 10.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ–3)

## விதை நெல் விநியோகிப்பு

விவசாய சம்மேளனங்களூடாக விதை நெல்லுக்கு விண்ணப்பித்த விவசாயிகளுக்கு உடுவில் கமநல கேந்திர நிலையத்தினால் விதை நெல் வழங்கப்பட்டு வருகிறது.

இம்முறை பி. டபிள்யூ 351 என்ற மூன்றரை மாத விதை நெல்லே வழங்கப்பட்டுள்ளது.

சம்மேளனங்களூடாக விண்ணப்பித்த விவசாயிகளுக்கு, உடுவில் கமநல கேந்திரநிலையத்துக்கு கிடைத்த விதை நெல் பங்கிட்டு விநியோகிக்கப்பட்டது.

போதிய அளவு விதை நெல் கிடைக்காமையினால் கிடைக்கப் பெற்ற விதை நெல் விண்ணப்பித்த பரப்பளவிற்கேற்ப பங்கிட்டு வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ஐ-154)

## நல்லூரில் இன்று

நல்லூர் கந்தன் ஆலய தீர்த்த உற்சவமான இன்று காலை 9.30 மணிக்கு பெரிய புராணச் சமயப் பேருரையை யாழ். இந்துக்கல்லூரி மாணவரான நாகேந்திரம் இராஜலக்ஸ்மன் நல்லை ஆதீனத்தில் நிகழ்த்துவார். (இ-3)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில் கொடியேற்றத்தை ஒட்டி லயஞான குபேர பூபதி வி. தெட்சணாமூர்த்தியின் மகனான தவில் வித்துவான் லய ஞான மேதை உதய சங்கர் கௌரவிக்கப்படவுள்ளார். நாளை செவ்வாய்க் கிழமை நண்பகல் நடைபெறவுள்ள கௌரவிப்பு நிகழ்வில் அவருக்கு கௌரவபட்டமும், பட்டயமும், தங்கப்பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும். (ஐ)

## இலவசமாக திருமணப் பதிவு

சட்டபூர்வமான திருமணப் பதிவினை மேற்கொள்ளாமல் வாழ்க்கை நடத்தும் குடும்பத்தினரின் சட்டரீதியான திருமணப் பதிவினை எதுவித செலவுமின்றி செய்து கொடுக்க சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் முன்வந்துள்ளனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரின் சமூக நலத் திட்டத்தின் கீழ் இவ் விவாகப் பதிவு இடம்பெற உள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழக பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்கள், சன சமூக நிலைய உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு, திருமணப்பதிவு செய்து கொள்ளாமல் இதுவரை குடும்பம் நடத்தி வருபவர்கள் தமது பதிவை மேற்கொள்ள வசதி செய்து கொள்ளுமாறு லயன்ஸ் கழகச் செயலாளர் ஐ. நற்குணநாதன் தெரிவித்துள்ளார். (இ-150)

# செலூலர் பாவிப்பதற்கு அமைச்சர்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, செப். 1

அமைச்சர்கள் செலூலர் தொலைபேசி பாவிப்பதைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஓர் அமைச்சில் இரு செலூலர் தொலைபேசி மட்டுமே பாவிக்கவேண்டும் என்றும்—

அமைச்சரும், பிரதி அமைச்சரும் மட்டுமே அவற்றைப் பாவிக்க வேண்டும் என்றும்—

மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா மட்டுமே இதற்கான கொடுப்பனவாக வழங்கப்படும் என்றும்—

அதற்கு மேல் வந்தால் அமைச்சர்களே செலுத்த வேண்டும் என்றும்—ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (இ-3-150)


# உதயசங்கர் உயர்புகழ் பெறுக!

## திரு தட்சிணாமூர்த்தி உதயசங்கர்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் 02–09–97 செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணியளவில் திரு. தட்சிணாமூர்த்தி உதயசங்கர் அவர்களுக்குப் பாராட்டு நடைபெறுகின்றது என்பது வியப்பான விடயமல்ல. சிலர் தந்தையருடைய புகழுடன் மட்டும் வாழ்பவர்கள். ஆனால் உதயசங்கரோ தந்தையின் புகழுடன் தன் கைவினைத் திறனாலே பெற்ற புகழுடன் வாழ்பவர். இளமையிலேயே இனிய லயஞானம் பெற்றவர். பலர் மகிழக் கலைத் தொண்டு ஆற்றி வருகிறார்.

லயஞான மாமணி உதயசங்கர் தன் கலையிலே மென்மேலும் உயர்புகழ் பெற்று எமக்கும் புகழ்தேடித் தர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். அவரைப் பாராட்டுபவர்களை நான் பாராட்டி மகிழ்கின்றேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:
மகாராணி பட்டுச்சோலை
யாழ்ப்பாணம். (சி/1446)


# மரண அறிவித்தல்கள்

## கதிரிப்பிள்ளை அன்னராசா
(முன்னாள் அலுவலர், பிரதேசசபை, மல்லாகம்)

மல்லாகம் நீதிமன்றவீதியில் வசித்த கதிரிப்பிள்ளை அன்னராசா 29-8-97 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற கதிரிப்பிள்ளை தங்கம்மாவின் அன்பு மகனும், புத்தூர் 10ஆம் கட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், பாறுப்பிள்ளை (கனடா), காலஞ் சென்ற நடராசா (இ. போ. ச. பரிசோதகர்), அன்னபூரணம் (ஓய்வு பெற்ற ஊழியர், சங்கானை வைத்தியசாலை), அழகராசா (பழம்பிள்ளையார் ரவல்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01-09-1997 இல் கனடாவிலுள்ள அவரின் மருமகள் திருமதி லோகேஸ்வரி சுப்பிரமணியத்தின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன். அவரது இறுதி அஞ்சலி நீதிமன்றவீதியிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் இன்று அனுஷ்டிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. அழகராசா
(சகோதரன்)

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.
(49348)

## கந்தையா பேரம்பலம்

இல. 7/3, புதுவீதி கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா பேரம்பலம் 28 - 08 - 1997 இல் சவூதியில் அகாலமரணமானார்.

அன்னார் திருமதி இந்திராணி பேரம்பலத்தின் அன்புக் கணவரும், சாருகேசி (கனடா), தயாளன் (கனடா), பவளகேசி, கோடீஸ்வரன் (கனடா), உதயகேசி, உதயகுமார் ஆகியோரின் தந்தையும், ச. கந்தையா, காலஞ்சென்ற அழகம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும், க. சுந்தரலிங்கம், க. சந்திரபாலா (கனடா) ஆகியோரின் சகோதரரும், சபாரட்ணம், காலஞ்சென்ற திருமதி ராசமணி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
தி. வசந்தன்
(மருமகன்)

(49350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா / வைத்தீஸ்வராக் கல்லூரி
# பழைய மாணவர் மன்றம்

மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், பொதுக் கூட்டமும் **1997-09-07** நடைபெறும். சகல அங்கத் தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கிறோம்.

10–00 ஒன்றுகூடலும், உள்ளக விளையாட் டுக்களும்
13–30 மதிய போசனம்
15–00 வருடாந்தப் பொதுக்கூட்டம்

1. தேவாரம்
2. மௌன அஞ்சலி
3. தலைமையுரை
4. சென்ற வருடாந்த அறிக்கை
5. நிர்வாகசபையின் சென்ற ஆண்டறிக்கை
6. கணக்கறிக்கை
7. பிரேரணைகள்
8. புதிய செயற்குழு தெரிவு
9. கணக்காய்வாளர் தெரிவு
10. பிறவிடயங்கள்
11. நன்றியுரை

தபால்மூலம் நேரில் அழைப்பு இல்லாததால் சகல அங்கத்தவர்களும் இதனை அழைப்பாக ஏற்று விழா வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள் கிறோம்.

அங்கத்தவர் தமது வருகையை 1997-09-05-க்கு முன்னதாக எமக்கு நிச்சயப்படுத்தினால் மன்றத்தி னால் மதியபோசன ஆயத்த ஒழுங்குகள் செய்ய உதவி யிருக்குமென கேட்டுக் கொள்கின்றோம்.

தற்காலிக தலைவர். **S. திருநாவுக்கரசு.**

தற்காலிக செயலாளர் **K. ஜெயம்**

(49337)

# லக்கி கல்வி நிறுவனம்
## அச்சுவேலி

எமது கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை வாழ்த்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ஞா. ஆதவன் | – | 153 |
| சி. காயத்ரி | – | 146 |
| க. பகுதான்யா | – | 134 |
| சு. தவளாங்கி | – | 127 |
| ச. விஜிதா | – | 120 |
| க. கபிலன் | – | 119 |

இயக்குநர்:
**திரு. இ. சந்திரராஜ்**

(49299)

# வாழ்த்துகின்றோம்

## யா / சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை
## 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு - 1995

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த

1. செல்வி தி. தரங்கினி 131 புள்ளி
2. செல்வன் இ. பிரதீப் 123 புள்ளி

இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இவர்களுக்கு கல்வி ஊட்டிய அதிபர். ஆசிரியர்களையும் ஊக்கமளித்த பெற்றோர்களையும் வர்ழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்.

(49328)

# D.C.S.
## DATA CONNECTION SYSTEMS (P. V. T) LIMITED COMPUTER TRAINING CENTRE

(பிரித்தானிய **ACP** அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

யாழ். மாவட்டத்துக்கான விசேட புலமைப் பரிசில் பரீட்சை 1997

மேற்படி பரீட்சை 07-09-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு (புதிய நேரம்) யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். பரீட்சைக் கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள் ளன. விண்ணப்பித்து அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அன்றைய தினம் 9-30 மணிக்கு யா/ யாழ் .இந்து மகளிர் கல்லூரியில் மேற்பார்வை யாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள லாம்.

DIRECTOR D.C.S
07, Ratnam Lane, K K. S. Road,
vannarpannai , Jaffna.

(49295)

# கழிவு அகற்றும் இயந்திர அறை புனரமைப்பு பணி

யாழ்ப்பாணம். செப். 1

யாழ். போதனாவைத்திய சாலையில் நாளாந்தம் சேரும் கழிவுநீரை வெளியேற்ற, பண்ணைக் கரையோரப்பகுதி யில் அமைந்திருந்த பாரிய இயந்திர அறையை புனர மைக்கும் வேலைகள் தற் போது ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது இந்த இயந்திர அறை சேதமடைந்ததோடு, அதில் பொருத்தப்பட்டிருந்த பாரிய இயந்திரமும் நாளுக்கு நாள் திருடர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டன.

இதனால் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக செய லற்றிருந்த இப் பிரிவை புன ரமைக்கும் வேலைகளை யாழ். மாநகர சபையினர் ஆரம்பித்துள்ளனர். (ஐ-15)

# பரிசாரகர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். போதனாவைத்திய சாலையில் நிலவும் பரிசாரகர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக பரிசாரகர் பயிற்சி நெறியை ஆரம்பிப் பதற்கான ஏற்பாடுகளை வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பரிசாரகர் பயிற்சிக்கு சிற் றூழியர்களிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த 28ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் நடை பெற்றது.

நேர்முகப் பரீட்சையில் தெரிவானவர்களின் பெயர் விவரங்கள் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி பயிற்சிநெறி நடத்து வதற்கான அனுமதியை பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (ஐ–15)

# சிறுமி காயம்

யாழ்ப்பாணம், செப்.1

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற சைக்கிள் விபத்தில் 5 வயதுச் சிறுமி காயமடைந் தார்.

வீதியோரத்தில் தமது வீட்டுப்படலைப் பகுதியில் நின்றவரான சிவராசா சிவப் பிரியா (வயது5) என்ற சிறுமியே காயமடைந்த வராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ஐ–15)

# ஆலய சேதவிவரம் சேகரிப்பு

உரும்பிராய் செப். 1

கடந்த கால வன்செயல் கள் காரணமாக சேத மடைந்த அல்லது பாதிப் புற்ற இந்து ஆலயங்கள் பற் றிய விவரங்களும், சேதங்கள் பற்றிய மதிப்பீடுகளும் கோப் பாய் பிரதேச செயலர் பிரிவு கலாசார உத்தியோகத்தரி னால் சேகரிக்கப்படுகின்றன. (ஐ-152)

# தொட்டிக்குள் தவறி விழுந்து சிறுவன் மரணம்

நெல்லியடி, செப். 1

குழாய்க் கிணற்றுக்கு அரு கிலுள்ள தண்ணீர்த் தொட் டிக்குள் தவறிவீழ்ந்த சிறுவன் மூச்சுத்திணறி பரிதாபமாக மரணமானான் இச்சம்பவம் அண்மையில் நெல்லியடி மகாத்மா வீதியில் நிகழ்ந் துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த விஜயமாறன் - செந் தூரன் (வயது 2 )என்ற சிறு வனே மரணமடைந்தான். (ஐ-109)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா /இராமநாதன் கல்லூரி

## 1995 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் விசேட பரீட்சையில் செல்வன் சத்தியமூர்த்தி லக்மன்

182 புள்ளிகள் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவருடன் சித்தியடைந்த

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி சிந்துஜா பாலச்சந்திரன் | 153 | புள்ளி |
| 2. | செல்வன் தவராஜா பிரதாபன் | 148 | புள்ளி |
| 3. | செல்வன் வசந்தகுமார் துஷித்தன் | 142 | புள்ளி |
| 4. | செல்வி மஞ்சுபாசினி கருணானந்தன் | 140 | புள்ளி |
| 5. | செல்வி சர்மினி விஜயகுமார் | 138 | புள்ளி |
| 6. | செல்வி நித்திலா ஸ்ரீரங்கநாதன் | 128 | புள்ளி |
| 7. | செல்வி சுமித்திரா மகேந்திரன் | 118 | புள்ளி |
| 8. | செல்வி சுகிர்தா தில்லைமகாராசன் | 116 | புள்ளி |
| 9. | செல்வி பத்மராஜி செல்வநாயகம் | 115 | புள்ளி |
| 10. | செல்வி கஜமகள் சுப்பையா | 109 | புள்ளி |

ஆகியோரையும், அவர்களைக் கற்பித்த ஆசிரியர் களையும், ஊக்குவித்த அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர்சங்கம்.

**யா. இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.**

(சி/ 1439)

# வாழ்த்துகின்றோம்

## வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால்

நடத்தப்பட்ட

## மாகாணநிலைத் தமிழ்த்தினப் போட்டியில்

## யா/இராமநாதன் கல்லூரி

1. நாட்டிய நாடகம் 1ஆம் இடத்தையும்
2. நடனம் - குழு 2ஆம் இடத்தையும்
3. நடனம்- தனி (பிரிவு 3) 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

இவற்றைப் பயிற்றுவித்த நடன ஆசிரியரையும், இசை ஆசிரியர்களையும், பக்க வாத்தியக் குழுவினரை யும், பங்குபற்றிய மாணவர்களையும் வாழ்த்துகின் றோம்.


இதேவேளை, இக்கல்லூரியிலிருந்து இவ்வாண்டு பல்கலைக்கழகம் புகும் 12 மாணவர்களையும் மன மார வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,**
யா / இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி-1440)

## அகன்றது ஆண்டுகள் ஆறொடொன்று
# (நினைவஞ்சலி) - 7

மலர்வு: 24 -- 07 -- 1947



உதிர்வு: 20 – 08 – 1990

## கந்தையா ரவீந்திரன்

திதி: 1997 – 09 – 01

எம் செல்வமே!
நெஞ்சமுமக்கே இடமாக வைத்தோம்
நினையாதொரு போதுமிருந்தறியோம்.
நின் ஆன்மா சாந்தியடைய
நிதமும் பிரார்த்திக்கும்:
பாசமிகு நெஞ்சங்கள்:

வேலணை .01

(49342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

தற்போது வெளியாகியுள்ளதும், 1996 ஆம் ஆண்டு நடைபெற்றதுமான 1995 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய, யாழ்ப்பாணம் ஜோண்பொஸ்கோ வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களை எதிர்வரும் 6-9-97 சனிக்கிழமை காலை 10 மணிக்கு (புதிய நேரம்) மேற்படி கல்லூரியில் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

**-பெற்றோரின் பிரதிநிதிகள்**

(சி/1443)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை

**செல்வி ஈஸ்வரி வேதாரணியம்**

அவர்களின் அன்புத் தயார்

**திருமதி வே. முத்துப்பிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நலன்புரிச் சங்கம்,**
**யா/மல்லாகம் ம. வி.**

(49312)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## யாழ். நகரமத்தியில் 01-09-97 முதல் நடைமுறைக்கு வரும் வீதி ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

01. யாழ். நகரத்திற்குள் வரும் வாகனங்கள் தரித்து நிற்பதற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள பின்வரும் இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை மாத்திரம் நிறுத்துதல் வேண்டும்.

அ. ஆஸ்பத்திரி வீதியில் — இலங்கை வங்கியிலிருந்து மணிக்கூட்டு வீதி வரையுள்ள பகுதியில் பிரத்தியேக மோட்டார் கார்கள் மற்றும் வாகனங்கள்;

ஆ. ஆஸ்பத்திரி வீதியில் — மணிக்கூட்டு வீதியிலிருந்து சிற்றி பார்மசி வரையுள்ள பகுதியில் மூன்று சில்லு துவிச்சக்கரவண்டிகள்;

இ. ஆஸ்பத்திரி வீதியில் — மின்சார நிலையத்திற்கு முன்புறமுள்ள பகுதியில் ஓட்டோ வாகனங்கள்;

ஈ. ஆஸ்பத்திரி வீதியில் — கஸ்தூரியார் வீதியிலிருந்து காங்கேசன்துறை வீதிச் சந்தி வரையுள்ள இடத்தில் லொறிகளும் சிறிய உழவு இயந்திரங்களும்;

குறிப்பு: தரித்து நிற்கும் வாகனங்களில் பொருள்களை ஏற்றுவதோ அன்றேல் இறக்குவதோ காலை 7.00 மணிக்கு முன்னரும், பிற்பகல் 4.00 மணிக்குப் பின்னருமே நடைபெற அனுமதிக்கப்படும்.

உ. மேலதிக வாகனங்கள் காங்கேசன்துறை வீதி ஆஸ்பத்திரி வீதியிலிருந்து தெற்குப் பக்கமாகவுள்ள பகுதியில் நிறுத்தப்படல் வேண்டும்.

02. யாழ். நகரத்திற்குள் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் ஸ்ரான்லி வீதியிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாகவும், வெளிச்செல்லும் வாகனங்கள் காங்கேசன்துறை வீதியூடாகவும் செல்லுதல் வேண்டும்.

03. கஸ்தூரியார் வீதியும், காங்கேசன்துறை வீதியும் ஒருவழிப் பாதையாகவே அமையும்.

04. மினிபஸ் தரிப்பிடம்:

பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள (வடக்குப் பக்கம்) மின்சார நிலைய வீதியிலிருந்து ஸ்ரான்லி வீதிக்குச் செல்லும் பாதையின் ஒரு பகுதி மினி பஸ் தரிப்பிடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வே. பொ. பாலசிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-08-1997.

(சி/1444)

# வெளிவாரிப் பட்டப் படிப்புப் பதிவு 1996 / 97

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1996 / 97ஆம் கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து **30 - 09 - 1997** வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி 1 கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்து நாகரிகம்,
வரலாறு,
புவியியல்,
பொருளியல்,
மெய்யியல்,
அரசறிவியல்,
தமிழ்,
நுண்கலை,
நாடகமும் அரங்கியலும்,
சமஸ்கிருதம்,
கிறிஸ்தவ நாகரிகம்.

விண்ணப்பப் படிவம் ரூபா 15-00
பாடத்திட்டமும் விதிமுறைகளும் ரூபா 35-00
(முதற்கலை / முதல் வர்த்தக நெறிகளுக்கானது)
பாடத்திட்டம் ரூபா 50-00
(சிறப்புக் கலைமாணி, வர்த்தகமாணி பகுதி 1 பாடநெறிகளுக்கு)
பாடத்திட்டம் ரூபா 15-00
(பொதுக்கலைமாணி பகுதி 1 ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும்)
விதிமுறைகள் – கைந்நூல் ரூபா 25-00
(சகல பகுதி 1 பாடநெறிகளுக்கும்)

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியை/கற்க விரும்பும் பாடங்களை குறிப்பிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூ. 11 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ. மீ. அளவுடைய தபால் உறையினை அனுப்புதல் வேண்டும்.

★ ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/1437)

# மனையியற் பயிற்சி

தையல், பப்ரிக், பெயின்ரிங், கேக்ஐசிங், சமையற்கலை, சிகை அலங்காரம், பூவேலை ஆகியவற்றுக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு:

**VAAKEE**

உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(49308)

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாணத் திணைக்களம் யாழ்ப்பாணம்

### மருத்துவ சிகிச்சை கூட்டுத் தொகுதி (இருமாடிக் கட்டடம்) நிர்மாணித்தல்: கட்டடம் - I

### ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

மேற்படி வேலைக்கான கேள்விகள் யாழ். அரசாங்க அதிபரினால் புரட்டாதி மாதம் 17 ஆம் திகதி முற்பகல் 10-30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எனது காரியாலயத்தில் உடனடியாக திறக்கப்படும்.

தரம் M 8 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ஐ. சீ. ரீ. ஏ. டீ.) நிர்மாண வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப்புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**கேள்வி வைப்புப் பணம்**

மேற்படி தகுதியுடையவர்கள் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500 ஐயும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25,400 ஐயும் யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும்.

கேள்விப் பத்திரங்களை 1997 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**க. சண்முகநாதன்,**
**அரசாங்க அதிபர்.**

கச்சேரி, யாழ்ப்பாணம்.
01-09-1997

(சி/1436)

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 22 -- 04 -- 1972

விண்ணில்: 12 - 09 - 1996

**செல்வன்**

**சரவணமுத்து சரவணபவானந்தன்**

(வெளிவாரி பல்கலைக்கழக மாணவனும், பிரவேச பண்டிதரும்)

திதி:- **01 - 09 - 97**

இன்னிசையும் இறைதமிழும் இணைந்திடு நற்பணி செய்தாய்
கன்னலென யாவரதும் கருத்தில் நீ உறைந்திட்டாய்
பொன்னம்பலவன் அடிக்கே தான் புகுந்தனையோ?
மன்னவனே கண்ணீரை காணிக்கை ஆக்கிநின்றோம்.

உன்நினைவில் வாழும்:
சரவணமுத்து குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி/1445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விற்பனை

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதியில் சகல வசதிகளுடன் அண்மையில் கட்டிய வீடு, மூன்று பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சி. சிவநாதன்,
48, விதானை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(49297)

# வாழ்த்துகின்றோம்

## யா/இந்து ஆரம்ப பாடசாலை

1995 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு விசேட புலமைப்பரிசில் பரீட்சையில்

**செல்வன் கொ.தே. ஹரிகரன் - 171**

புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மிகவும் ஊக்கமளித்துக் கற்பித்த அதிபரையும், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

- பெற்றோர்

(49300)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மட்டுவில்
## வளர்மதி கல்விநிலையம்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு — 1995
சித்தியடைந்தோர் விவரம்

★ துரைசிங்கம் துஷ்யந்தன்
★ தியாகராஜா தரங்கினி
★ நடேசபிள்ளை யாழமுகன்
★ வாமதேவன் வினோத்
★ சுந்தரலிங்கம் சுஜீபன்
★ இந்திரன் அனுராஜ்
★ தவநாதன் யாழினி
★ சிவராசா துர்சன்
★ வீரசிங்கம் விஜயகாந்
★ புவனசுந்தரராசா சர்மளா
★ இராசேந்திரம் நிருபன்

இவர்கட்கும், இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**வளர்மதி கல்விக் கழகம்,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

(49330)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 06 — 1933

மறைவு: 20 — 08 — 1990

தொலகட்டி வயாவிளான்

## அமரர் வைத்திலிங்கம் நடராசா

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி.கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி—அச்சுவேலி)

திதி:- 1- 09- 1997

அன்பு அப்பாவே! ஆண்டு ஏழு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது.

பாசமுள்ள தந்தையாய், கடமைமிகு தலைவனாய் எம்மை வழிகாட்டிய அப்பாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய கந்தன் திருத்தத்தில் உங்கள் காலடியில் நின்று அஞ்சலி செலுத்தும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அரசடி 4 ஆம் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(49278)

## சந்நிதி கொடியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 1

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை 14 தினங்கள் நடைபெறும்.

மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் தெய்வீகக்கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். (ஐ-5)

## நெடுந்தீவு மத்திய பகுதிக்கு மின் விநியோகம்

நெடுந்தீவு மத்திய காளா முனை, சிறுகரை ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பகுதியில் தீர்த்தக்கரை மற்றும் வடக்குகரை யோரப்பகுதி மக்களின் கோரிக்கையை அடுத்து இப் பகுதிகளுக்கும் விரைவில் மின்சாரம் வழங்கப்பட உள்ளது. (ஐ.111)

## சிறுமி காயம்

நேற்று நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவின் போது அடியார்கள் கூட்டத்தின் இடையே ஏற்பட்ட நெரிசலில் சிக்கிய சிறுமி ஒருத்தி காயமடைந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த தங்கவேல் பெளஷிகா (வயது 7) என்ற சிறுமியே காயமடைந்தவராவர். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-15)

## 4 நிலையங்களில் போலியோ மருந்து

குருநகர், செப். 1

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்குவதற்காக குருநகரில் நான்கு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ். மடம் வைத்தியசாலை, குருநகர் அரசினர் வைத்தியசாலை, திருநகர், குருநகர்தண்ணீர்த் தாங்கியடி ஆகிய இடங்களில் இந் நிலையங்கள் இயங்கும்.

குருநகரில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கான பதிவு வேலைகளை யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால்தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-51)

# நியூட்டன் கல்வி நிலையம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்தி)

**G.A.Q., B.A.,B.Com. (யாழ்.,பேராதனை)**

★ பொருளியல் ] திரு. லோகசிங்கம் (B.B.A) / திரு. விஜயசுந்தரம் B.A(Co.Csp.) / திரு. இளங்கோ (B. A)
★ கணக்கியல்:- திரு. கியூமன்
★ வர்த்தகம்:- திரு. சிவானந்தன் (B.B.A)
★ கணிதம், புள்ளிவிவரவியல் ] ஸ்பெல்மன்
★ ஆங்கிலம்:- BRITTO
★ தமிழ்:- அமரசிவம் (B. A)
★ இந்து நாகரிகம்:- சிவ.மகாலிங்கம் (B. A)
★ அரசியல்:- சாந்தன் (Poli. SP.)
★ புவியியல்:- இக்னேசியஸ் (B.A)

(மாணவர்கள் விரும்பிய பாடங்கள் கற்கலாம்)

**ஆரம்பம்: 06 - 09 - 97**

காலை 8-00 — 2-00

(49255)

# கலையகம்

ஆவரங்கால்

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**

★ Basic English
★ சிங்களம் (பேச, வாசிக்க, எழுத)

ஆரம்பம்:- 2- 9- 97 செவ்வாய் 2.30 மணி

(மாணவர்களின் வசதிக்கேற்ப இருவகுப்புகளுக்கும் நேர அட்டவணை தயாரிக்கப்படும்)

(49293)

# வாழ்த்துகின்றோம்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை — 95

## யா/துன்னாலை காசிநாத வித்தியாலயம்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தோர் விவரம்

| பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|
| செல்வி S. தேவகிசுதா | 151 |
| செல்வன் S. கஜேந்திரன் | 140 |
| செல்வன் K. நவநீதன் | 134 |
| செல்வி S. துஷியா | 131 |
| செல்வன் S. புருஷோத்மன் | 122 |

இப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், இம் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து கற்றுக்கொடுத்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பெற்றோர்கள்.

யா/துன்னாலை
காசிநாத வித்தியாலயம்.

(49341)

# தொழிற் பயிற்சிகள்

உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் இலகுவான முறையில் தொழில் வாய்ப்பு பெறுவதற்கு ஏற்ற முறையில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றது.

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன ரெலிவிசன், றேடியோ, வீடியோ டெக் மற்றும் வேறு எலக்ரோனிக் பொருள்கள் திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்:- 8 மாதம்

★ எயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்களின் தொழிற்பாடு, திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படுகின்றன
காலம்: 6 மாதம்

★ றிவைண்டிங், வயறிங்

மோட்டர், ரான்ஸ்போமர், டைனமோ றிவைண்டிங் செய்தல், வீட்டு மின் சாரவேலை பயிற்சியளிக்கப்படுகின்றன.

**பயிற்சிகள் ஆரம்பம்:**

**08 - 09 - 97** (கிழமை நாள்கள்)
**11 - 09 - 97** (சனி, ஞாயிறு)

விவரங்களுக்கு;

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை),
யாழ்ப்பாணம்.

(49313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இல. 51, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி, கல்வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சண்முகராஜா (மதிப்பீட்டாளர்), 387, கோயில் வீதி, நல்லூர். [49327]

ஆனைக்கோட்டை, சங்கரப்பிள்ளை வீதியில், பழைய பார், இரண்டறைகளுடன் கடைக் கட்டடமும் நிலப் பரப்பு ஒன்றும், குளி 2.68 - ம் பயிர்வகைகளும், வியாபாரம், குடியிருப்பிற்கேற்ற நல்ல சூழலில், தவற விடாதீர்கள். அரிய இறுதி சந்தர்ப்பம், பின்னர் எக்காரணம் கொண்டும் விற்கப்பட மாட்டாது. தொடர்பு: உரிமையாளர், மோகன்மாஸ்டர், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. [49343]

## தவறிவிட்டது

உசன் மிருசுவிலைச் சேர்ந்த அன்ரன் ஜோசப் என்பவரது விசேட அடையாள அட்டை, தொழில் சார் அடையாள அட்டை (இ.போ.ச.) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் இ.போ.ச, நேரக்காப்பாளர், யாழ்ப்பாணம். [49311]

## உடன் விற்பனை

பிறிமா சிவப்பு, சேவல் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: தா, ஸ்ரீகாந்தன், 702, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். [49334]

## ஆங்கிலம்

இளைப்பாறிய, ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியரினால் ஆரம்பத்தில் இருந்து பல்கலைக்கழகம் வரை இலகு முறையில் அவரவர் தேவைக்கேற்ப ஆங்கிலம் கற்றுக் கொடுக்கபடும். தேவையெனின் நினைவுக் குறிப்பு கொடுக்கப்படும். க. துரைரத்தினம், 67/1, குருசோ வீதி, யாழ்ப்பாணம். [49274]

## ஓர்கன் வகுப்பு

ஓர்கன், கிற்றார், புல்லாங்குழல் ஆகிய வகுப்புக்கள் எல்லா நாள்களிலும் 2 மணியிலிருந்து நடைபெறுகின்றன. முகவரி: கரவீணா, கற்பகப்பிள்ளையார் கோயிலடி 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம் 1 இன் அருகாமையில்). [48864]

## மணமகள் தேவை

36 வயதுடைய அரசாங்க உயர் பதவி வகிக்கும் 7 இல் செவ்வாயுள்ள மணமகனுக்கு 32 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. S. சண்முகராஜா (மதிப்பீட்டாளர்), 387, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [493091]

## A/L'98
## DAY CLASS

கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 03-09-97
புதன் 8-00 A.M.

## புலமைப்பரிசில்' 98

(தற்பொழுது Yr. 4)
பயிற்சி வகுப்புகள்
சனி, ஞாயிறு 4- 5.30P.M.
வினாத்தாள்கள் இலவசம்

**SHAMROCK**

(49324)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய அதிபர்

**திரு. சு. சேய்சோதிகாந்தன்**

அவர்களது அன்பு மாமியார்

**திருமதி முத்தம்மா இராசநாயகம்**

(வற்றாப்பளை- முள்ளியவளை)

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனை வேண்டுகிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.**

(49326)

# 31 -ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் : 15 - 07 - 1964

விண்ணில் : 02 - 08 - 1997

**கந்தையா குணேஸ்வரன் (அப்பன்)**

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
எங்களை வாழ வைத்த தெய்வமே!
ஈந்துவக்கும் இன்பமதை இயல்பாகக் கொண்டவரே
மின்னல் போல் மறைந்தீரே - காலன்
உம்மைக் கவர்ந்து சென்றானோ பாரினிலே
எங்களைத் தவிக்க விட்டுச் சென்றீரே ஐயா!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்.

செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(49331)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## சரஸ்வதி கல்வி நிலையம்

**நுணாவில் மத்தி, சாவகச்சேரி**

(வைரவர் கோயிலடி)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை 1996 (விசேடம்)
இப்பரீட்சையில் தோற்றியோர்: 56 சித்திபெற்றோர் 41
சித்தி பெற்றோர் விவரம்:-



நான்கு மாவட்டங்களுள் நடைபெற்ற விசேட பரீட்சையில் 3 ஆம்இடத்தைப் பெற்ற செல்வன் **துரைசிங்கம் கேசவன்** (178 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| து. கேசவன் | 178 | பே. சேரலாதன் | 132 |
| சி. சுகன்யா | 169 | ற. கோபிறாஜ் | 130 |
| கு. அஜித்காந் | 164 | கு. கிரிவர்ணன் | 127 |
| யோ. அர்ச்சனா | 164 | வா. வினோத் | 126 |
| ஜெ. மேனகா | 162 | யோ. துஜன் | 126 |
| தி. இளங்கோ | 159 | சு. பிரகலாதன் | 126 |
| மு. சோபனா | 155 | த. சுபேதா | 126 |
| சி. இளங்கோ | 153 | சி. ஸ்ரீரங்கனி | 125 |
| ம. இளஞ்செழியன் | 150 | யோ. நிசாந்தன் | 125 |
| து. ஐங்கரன் | 149 | க. கஜிதரன் | 122 |
| வே. சாரங்கன் | 149 | சு. சுஜீவன் | 121 |
| த. கோகுலவதனன் | 148 | கு. துஷிதன் | 120 |
| தி. கௌசல்யா | 145 | ச. ராதிகா | 120 |
| தெ. அபிரா | 143 | ந. அனித்தா | 116 |
| சு. சுபோசன் | 142 | க. குகானந்தன் | 115 |
| மு. மீரா | 140 | யோ. பிரதீப் | 113 |
| சு. கோகுலராஜ் | 140 | பு. சுகன்யா | 113 |
| ப. சஞ்ஜித் | 140 | ந. சாளினி | 111 |
| ஜெ. நிவேதன் | 140 | ப. றமணா | 110 |
| ல. கஜேந்திரா | 137 | க. டிலானி | 108 |
| ச. பிரதாப் | 137 | | |

சித்தி பெற்ற மாணவர்களை வாழ்த்துவோர்:

**நிலைய ஆசிரியை, பெற்றோர்.**

(சி/1432)

# 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



அச்சுவேலி தெற்கு

**அமரர் வைரவப்பிள்ளை சிவக்கொழுந்து**

(முன்னாள் ஆய்வு கூட உதவியாளர்,
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.)

தோற்றம்:- 16 - 06 - 1930

மறைவு:- 02 - 08 - 1997

எங்கள் வீட்டில் சுடர் விட்டு
எரிந்த குல விளக்கு அணைந்ததுவே
திங்களொன்று ஆனதையா!
சென்ற இடமோ தெரியவில்லை
எதிலும் தோல்வி கண்டதில்லை;
தோற்று விட்டீரே காலனிடம்.

01 - 09 - 97 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரன், பேர்த்தி.

ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(49304)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# குப்பி விளக்கு மரணங்கள்

குப்பி விளக்கு வெடித்துச் சிதறியதில் இரண்டு சிறுமிகள் உயிரிழந்த சம்பவம் கம்பர் மலையில் நிகழ்ந்துள்ளது. அதே விபத்தில் மற்றும் இருவர் - தாயும் மகளும் - காயமடைந்துள்ளனர்.

இதே போன்று குப்பி விளக்கு வெடித்துக் கணவனும் மனைவியும் படுகாயமடைந்த மற்றொரு விபத்தும் மந்திகையில் இடம் பெற்றிருக்கிறது.

குப்பி விளக்கு வெடிப்பதனால் சிறுவர் சிறுமியர் மட்டுமன்றி பெரியவர்களும் காயப்பட்டும், இறந்தும் போன சம்பவங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் குடா நாட்டில் நடைபெற்றிருக்கின்றன.

மண்எண்ணெய் ஓர் எரிபொருள்என்பதனை மறந்துஅதனைக் கண்டமாதிரியும் விளையாட்டுத்தனமாகப் பாவிப்பது அபாயகரமானது; உயிர்ஆபத்தைத் தரக் கூடியது. எரிபொருள் எதுவுமே தீயில் பட்டவுடன் தீ பரவும் என்பதனை அனேகமாகப் பெற்றோர்கள் அறிந்திருப்பர். அவ்வாறிருந்தும் எரிந்து கொண்டிருக்கும் போத்தல் விளக்கிற்குள் மண் எண்ணெய் விடுவதற்குபிள்ளைகளை அனுமதிக்கக்கூடாது.

எரிந்துகொண்டிருக்கும் விளக்கிற்குள் மண்எண்ணெய் கொதி நிலையில் ஆவி நிலையில் இருக்கும், விளக்கு மூடப்பட்டிருந்தால் அமுக்கத்தின் காரணமாக அந்த ஆவி வேகமாக மேலெழுந்து தீப்பற்றிக் கொள்ளும். ஆகையால் எரிந்து கொண்டிருக்கும் விளக்கிற்குள் மண்எண்ணெய் விடுவது எப்போதும் ஆபத்தானது.

இதனைச் சிறுவர் சிறுமியர்களுக்கு விளக்குவதுடன் பெற்றோரும் இது விடயத்தில்அவதானமாகவும் எச்சரிக்கையுடனும் அவர்களைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

இப்போது கிராமங்களில் மட்டுமன்றி நகரங்களிலும் மிகப் பல வீடுகளில் போத்தல் விளக்குகளே கை விளக்குகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. முந்திய காலத்தில் உலோகக் கலவைகளினால் செய்யப்பட்ட (பித்தளை) விளக்குகளே கைவிளக்குகளாகப் பாவனையில் இருந்தன, அந்த விளக்குகள் சரிந்து உடையில் தீப்பற்றி விபத்துகள் ஏற்பட்டு, எரிகாயங்கள் உண்டாகிய போதிலும், ஒப்பீட்டளவில் உயிராபத்துக் குறைவாகவே இருந்தது.

சில காலத்திற்கு முன்னர் இலங்கை முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி விபத்துமரணங்களில்போத்தல் விளக்கு மரணங்கள் மிகக்கணிசமானவை எனக் கண்டறியப்பட்டது தற்கொலைச் சம்பவங்களுக்கு அடுத்து போத்தல் விளக்கு விபத்துக்கள் 2 ஆவது இடத்திலுள்ளன.

வீட்டுக்கு விளக்குத் தேவை. அது இல்லையேல் மக்கள் இருளில் வாழ நேரிடும். ஆனால் அது நடைமுறைச் சாத்தியமில்லை. ஒப்பீட்டளவில் மண்எண்ணெய் விலை குறைந்த எரிபொருள்.அதனால் மண்எண்ணெய் விளக்குப் பாவனையை நிறுத்த முடியாது; அரசு நினைத்தாலும் தடை செய்யவும் முடியாது.

போத்தல் விளக்குக்குப் பதிலாக, பாதுகாப்பான விளக்குகளைப் பயன்படுத்த மக்களைத் தூண்டுவதே போத்தல் குப்பி விளக்கு மரணங்களைத். தடுக்க ஒரே வழி. பாதுகாப்பான மண்எண்ணெய் விளக்குகளை வரவழைத்து அவற்றை மலிவு விலையில் மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.சமூக சேவை அமைச்சு மற்றும் தொண்டர் நிறுவனங்கள் இது விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; கவனஞ் செலுத்த வேண்டும்.

# விமான இழப்புகள் பற்றிய அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, செப். 1

விமான விபத்துக்கள் தொடர்பாக ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை கடந்த புதன்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது.

ஈழம் மூன்று போரில் இழக்கப்பட்ட 19 வானூர்திகள் தொடர்பான விசாரணைகளை இக்குழு நடத்தியது.

முன்னாள் இராணுவத் தளபதி டெனிஸ் பெரேரா, முன்னாள் விமானப் படைத் தளபதி பத்மன் மெண்டிஸ், முன்னாள் பொலீஸ் மா அதிபர் ஏனஸ்ட் பெரேரா, சட்டமா அதிபர் சி. ஆர். டி. சில்வா ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

விமானக் கொள்வனவில் இடம்பெற்றுள்ள ஊழல்களை நோக்குமிடத்து, மோசடி மூலம் திரட்டப்பட்ட நிதி மூலம் பக்கிங்காம் அரண்மனை போன்று பல அரண்மனைகளைக் கட்டியிருக்க முடியும் என்று விசாரணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(இ-150-3)

## பட்டலந்த ஆணைக்குழு

# ரணில் சாட்சியம் அளிக்கும்போது எம்.பிக்கள் வெளியே அமர்ந்திருப்பர்

கொழும்பு, செப். 1

பட்டலந்த ஆணைக்குழு விசாரணையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 3ஆம் திகதி சாட்சியம் அளிக்கும்போது ஐ.தே.க. எம்.பிக்கள் விசாரணை நடைபெறும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு முன்னால் அமர்ந்திருக்க முடிவு செய்துள்ளனர்.

நாளை மறுதினம் நண்பகல் 1-30 மணிக்குப் பட்டலந்த ஆணைக்குழு முன்பாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சாட்சியம் அளிப்பார்.

அச்சமயம் ஐ.தே.க. சார்பான நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் விசாரணையில் சமுகமளித்திருப்பார்கள்.

கடந்த இரு தினங்களாகச் சாட்சியமளிப்பது தொடர்பாக ரணில் சட்டத்தரணிகளுடன்ஆலோசனைகள் மேற்கொண்டார்.

அதேநேரம் — ஜப்பானில் இருந்து கொழும்பு திரும்பிய அனுரா பண்டாரநாயக்க ரணில் விக்கிரமசிங்கவுடன் 2 மணி நேரம் பேச்சு நடத்திய பின்னர் லண்டன் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

# வட.- கிழக்கு மீன்பிடி அபிவிருத்தி பற்றி ஆராய ஐவர்குழு நியமனம்

வடக்கு — கிழக்கில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வது குறித்து ஆராய ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

கடலில் மீன்பிடிக்கும் எல்லைகள் பற்றியும், மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இந்தக்குழு ஆராய்ந்து 3 வாரங்களில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

இந்தக் குழுவில் மின்பிடி அமைச்சு செயலாளர் பந்து சேனா, மீன்பிடி அமைச்சு ஆலோசனைச்சபை உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சதிரன், சீநோர் நிறுவன முகாமையாளர் திலக் இடமல்கொட ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். (இ-3)

# இளவரசி...

(முதலாம் பக்கத் தொடர்)

5 பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்களை விசாரணைக்காகத் தடுத்து வைத்துள்ளனர். இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் ஒரு ஸ்கூட்டரையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

இளவரசி டயானாவும் டோடி அல்பெய்ட்டும் நேற்று முன்தினம் பாரிஸ் சென்றடைந்திருந்தனர்.

அல்பெய்ட்டின் தந்தைக்குச் சொந்தமான றிச் ஹோட்டலில் இராப்போசனம் அருந்திய பின்னர் புறப்பட்டுச் சென்ற சமயம் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

இதேவேளை— பக்கிங்காம் அரண்மனை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், இளவரசி டயானாவின் மரணச் செய்தி கேட்டு எலிஸபெத் மகாராணியாரும், இளவரசியின் முன்னாள் கணவர் இளவரசர் சாள்ஸும் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் சார்ள்ஸுடனான டயானாவின் வாழ்க்கை கடந்த வருடம் விவாகரத்தில் முடிந்தது.

பி. பி. ஸி. நிலையம் இளவரசி டயானாவின் மறைவையிட்டு அதன் வழமையான நிகழ்ச்சிகளனைத்தையும் ரத்துச் செய்தது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் இளவரசி டயானாவின் மறைவு தம்மைப் பெரிதும் துயரத்தில் ஆழ்த்தி விட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

36 வயது நிரம்பிய இளவரசி டயானாவுக்கு இளவரசர் சார்ள்ஸுக்குப் பிறந்த வில்லியம், ஹரி என்று இரு குழந்தைகள் உள்ளனர்.

சமீப காலமாக எகிப்திய கோடீஸ்வரரான டோடி அல் பெய்ட்டுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது.

இளவரசி டயானாவும் டோடிஅல்பெய்ட்டும் மத்திய தரைக் கடல் பகுதியில் உல்லாசக் கப்பல் ஒன்றில் மிக நெருக்கமான நிலையில் இருப்பதை படம் பிடித்து பத்திரிகைகள் வெளியிட்டதைத் தொடர்ந்து இவர்களது உறவு பற்றிய செய்திகளையும் புகைப் படங்களையும் வெளியிடுவதில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அளவுக்கு மிஞ்சிய ஆர்வம் காட்டிவந்தன.

(41 வயது டோடி அல் பெய்ட் எகிப்திய கோடீஸ்வரர் ஒருவரின் மகன் ஆவார்.)

(இ-5)

# சடலத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

வின் காரை அப்புறப்படுத்துவதற்கு நான்கு மணி நேரம் பிடித்ததாகவும் —

கடும் காயமடைந்த டயானா உடனடியாக பாரிஸில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

டயானாவின் உயிர் பிரிந்த சமயம் பிரான்ஸுக்கான பிரிட்டிஷ் தூதுவர் மற்றும் பிரெஞ்சு அரச உயர் அதிகாரிகள் ஆஸ்பத்திரியில் நின்றனர்.

1981 ஆம் ஆண்டு இளவரசி டயானாவை சார்ள்ஸ் திருமணம் செய்தார்.

இவர்களது திருமண வாழ்க்கை பதினொரு வருட காலமே நீடித்தது.

கமிலா பாக்கர் என்ற மணமான பெண் ஒருவருடன் சார்ள்ஸுக்கு உள்ள தொடர்பு குறித்து தகவல்கள் வெளிவர ஆரம்பித்ததை அடுத்து இவர்களின் திருமண வாழ்வில் நெருக்கடி ஆரம்பமானது.

இளவரசி டயானா விரக்தி அடைந்து தற்கொலை செய்யவும் முயற்சித்தார்.

எனினும் கடந்த வருடமே சார்ள்ஸும் டயானாவும் சட்டப்படி விவாகரத்துச் செய்திருந்தனர். (இ)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## காத்திடும் தெய்வம்

அறுமுகப் பெருமானே அமரர் தலைவனே
நறுமணந் திகழ் நல்லூர் வாசனே
குறு நகை வள்ளி தெய்வானை கேள்வனே
மறு அறு முகத்தில் மந்தகாசமாய்
முறுவலைக் காட்டியே காத்திடும் தெய்வமே
செறுநரை ஒழித்திடத் திடமே பூண்டவா
உறுதுணை உனைப்போல் உண்டோ நாங்கள்
[illegible]
[illegible]

## நாளை

**ஆவணி 16**

திங்கட்கிழமை

**திதி:** அமாவாசை

வைகறை 5.40 வரை.

**நட்சத்திரம்:** மகம்.

பின் இரவு 1.40 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 12.05-1.35

ராகுகாலம்: 7.35-9 .05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வைத்திய நிலையம்

நெல்லியடி, செப். 1

பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலை மன்றத்தில் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் பொது வைத்திய முகாம், நீரிழிவு விழிப்புணர்வு முகாம் ஆகியவை கடந்த வாரம் வடமராட்சி லயன்ஸ் கழகத்தலைவர் தலைமையில் இடம் பெற்றன.

இந்த வைத்திய முகாமில் லயன் கழக டாக்டர் கேதீஸ்வரன், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை, மந்திகை மருத்துவமனையைச் சேர்ந்த தென்பகுதி டாக்டர் சந்தான ஆகியோர் கலந்து கொண்டனர்.

சலரோக விழிப்புணர்வு பற்றிய கருத்துரையை டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை நிகழ்த்தினார். (இ-109)

# கிளிநொச்சியில் இவ்வருடம் 122 பேர் பலி!

வவுனியா, செப். 1

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினரின் தாக்குதல்கள் காரணமாக இந்த வருடத்தில் இதுவரை 122 தமிழர்கள் உயிரிழந்துள்ளனர் என்று கிளிநொச்சி வெகுஜன அமைப்பு ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் செயலணிக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 98 பேரும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 14 பேரும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 10 பேரும் உயிரிழந்தனர் என்றும் —

73 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் — அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (இ-3-164)

# உண்ணாவிரதம் மேலும் விஸ்தரிப்பு

கொழும்பு, செப். 1

பண்டாரவளை இளைஞர் புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்று வரும் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் விரிவடைந்து வருகிறது.

கடந்த 25 ஆம் திகதி 7 பேருடன் ஆரம்பமான இப் போராட்டம் தற்சமயம் 75 பேருடன் விரிவடைந்து உள்ளது.

இந்த முகாமில் வடக்கு — கிழக்கைச் சேர்ந்த 109 பேர் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர்.

பண்டாரவளை புனர் வாழ்வு முகாமை மூடவேண்டாம் என்றும் —

தெல்லிப்பழையில் அமையும் முகாமுக்கோ அல்லது வேறு எந்த முகாமுக்கோ தம்மை மாற்றக்கூடாது என்றும் —

புனர்வாழ்வு ஆணையாளரை மாற்றக் கூடாது என்றும் —

புனர்வாழ்வு காலத்தை 6 மாதமாக வரையறை செய்ய வேண்டும் என்றும் — கைதிகள் கோரியுள்ளனர்.

(இ-21-3)

# சர்வஜன...

(முதலாம் பக்கத் தொடர்)

வுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதில் 42 சதவீதமானவர்கள் தீர்வுப் பொதியில் நம்பிக்கை வைத்தவர்கள். எஞ்சிய 12 சதவீதமானவர்களும் எனது ஆதரவாளர்களாவர்.

அரசின் தீர்வுப்பொதியை ஐ. தே. க. நேரடியாக எதிர்க்கமாட்டாது. தினேஷ் குணவர்த்தனா போன்ற பேரினவாதிகளைத் தூண்டி விட்டே ஐ. தே. க. எதிர்க்கும்.

சர்வஜன வாக்கெடுப்பில் அரசு வெற்றிபெறுமானால் பிராந்திய சபைகளுக்கான தேர்தல்கள் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும்.

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். (இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபால மெண்டிஸ் விவகாரம்:

# ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு என்ன?

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால மெண்டிஸின் குடியுரிமையை பறிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் வரும்போது எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாக ஐ. தே. கட்சி எம். பிக்கள் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்துக்கு இந்தப் பிரேரணை வரும்போது மனச்சாட்சிப்படி நடக்க அனுமதிக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும் —

ஐ. தே. க. இந்தப் பிரேரணையை ஆதரிக்கக் கூடாது என மற்றொருதரப்பினரும் —

பிரேரனை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்பு செய்ய வேண்டும் என்று இன்னொரு தரப்பினரும்—ஐ. தே. க. தலைமைப் பீடத்தை வற்புறுத்தி வருகின்றனர்.

இதேநேரம் — நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யுமாறு ஐ. தே. க. தலைமைப்பீடம் அவரைக் கேட்க விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ–3–150)

## ஸ்ரீங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதனைத் தொடர்ந்து ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விமானப் படையின் விமானிகளுக்கு தலைமைப்பீடம் எச்சரித்துள்ளது.

அதேநேரம் — விடுதலைப் புலிகளுக்கு ஏவுகணைகள் கிடைத்துள்ளன என்பதை வெளிநாட்டு வட்டாரங்களும் உறுதி செய்துள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-150-3)

# NEW COMPUTER
## FOR SALE

**WINDOWS - 95**

**PENTIUM**

HD 1.18 GB
RAM 8 MB
SPEED 120 MHZ

Contact:

**UTHAYAN,**
**361, Kasthuriar Road,**
**Jaffna.**

# Institute of Informatics Studies
*Jaffna, Sri Lanka.*



## COMPUTER COURSES

**Next Sessions Starting On Saturday 6 th September, 97 at 10. 00 a. m.**

### Diploma in Software Technology
(Special graduation course)

Entry Qualification: A/L - 3 Passes
Duration: Full Time : 12 Months; Part Time : 15 Months

### Certificate in MS Office
(The best computer based office management software tool)

WINDOWS 95 · MS WORD · MS EXCEL · MS ACCESS

### Programming Languages

C/C++ · PASCAL · BASIC

### Application Packages

dBASE III + · LOTUS 123 · SMART SUITE · COREL DRAW · PAGEMAKER · AUTO CAD

* Excellent teaching.
* Payments can be made in instalments.
* 5% Discount on full payment.
* Excellent collection of books.
* Practicals around the clock.

*For further details contact:*



**Institute of Informatics Studies ,**
**• 68, Clock Tower Road , Jaffna.**
**• Navalar Madam, Karaveddy.**

(சி/1442)

உ

## தொண்டமானாறு செல்வச்சந்நிதி
# வருடாந்த மஹோற்சவம்

ஈசுர வருடம் ஆவணி 17 ஆம் திகதி (02–09–97) காலை 6 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

★ காலைத் திருவிழா ஆவணி 20 ஆம் திகதி (05-09-97) வெள்ளி காலை 7 மணிக்கு நடைபெறும். மாலை சதுர்த்தி—விநாயகப் பெருமானுடன் முருகன் எழுந்தருளுவார்.

விசேட உற்சவங்கள்

பூங்காவனம் — 10–09–97 புதன் காலை 9 மணி
கைலாய வாகனம் — 11-09-97 வியாழன் காலை
சப்பறம் — 14-09-97 ஞாயிறு மாலை
தேர் — 15-09-97 திங்கள் காலை 9 மணி
தீர்த்தம் — 16–09–97 செவ்வாய் காலை 9 மணி
மௌனத் திருவிழா — 16-09-97 செவ்வாய் மாலை

★ காலைத் திருவிழா 8 மணிக்கும் மாலைத் திருவிழா 5 மணிக்கும் நடைபெறும்.

பிரதமகுரு: **சிவஸ்ரீ தங்கராசஐயர், த. குகனேந்திரஐயர், த. அகிலேந்திராஐயர்**

விளம்பர அன்பளிப்பு

## சிவாஸ் கிறீம் ஹவுஸ்

செல்வச்சந்நிதி, கொக்குவில்.

(47399)

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,
## பருத்தித்துறை.
## முக்கிய அறிவித்தல்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் பக்தர்களே! ஒரு சில ஏமாற்றுப் பேர்வழிகள் குழுவாகவும், தனியாகவும் ஐயர் வேடம் போட்டும், கள்ளியங்காடு, கந்தர்மடம் போன்ற இடங்களில் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் திருப்பணி, அன்னதானம் வழங்குவதாகத் தெரிவித்து பணம், பொருள்கள் சேகரிப்பதை அறிந்து வேதனை அடைகிறோம். இக்கோயில் நிர்வாகத்தினர் எவருக்கும் இவ்வாறு நிதி சேகரிக்க அனுமதி வழங்கவில்லை. நீங்கள் ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்வதானால் கோயிலில் உள்ள கருமபீடத்தில் செலுத்தி பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்ளவேண்டும். பணமாகச் செலுத்த விரும்புவோர் இலங்கை வங்கி 5014 கணக்கில் பருத்தித்துறை கிளையிலும், தேசிய சேமிப்பு வங்கி 2002 கணக்கில் பருத்தித்துறை கிளையிலும் செலுத்தலாம்.

பொய் கூறி கோயில் பெயரில் பணம் சேகரிக்க முன்வருவோர் குறித்து அருகில் உள்ள பொலீசாரிடம் அல்லது கிராம சேவகரிடம் தகவல் தெரிவித்து எங்களுடன் கடிதத் தொடர்பு கொள்ளுமாறு பணிவாக வேண்டுகிறோம்.

— தர்மகர்த்தா சபையினர்

(49292)

# இடம் மாற்றம் பற்றிய அறிவித்தல்



இல. 3, ஸ்ரான்லி வீதியில் இதுவரை காலமும் இயங்கிவந்த அருள்விநாயகர் என்னும் ஸ்தாபனம்
**03-09-1997 தொடக்கம் இல. 103, ஸ்ரான்லி வீதி (மக்கள் வங்கி அருகில்)**
இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
**இதன் கிளை நிறுவனம் இல. 262, கண்டி றோட், சாவகச்சேரியில் இயங்குகின்றது.**

உங்களுக்குத் தேவையான புதிய மோட்டார் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், அனைத்து மோட்டார்சைக்கிள் பற்றரி வகைகள், வாகன பற்றரி வகைகள், தரமான அசிட் வகைகள் ஆகியவற்றை நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை ஸ்தாபனம்:

**அருள் விநாயகர்,**
இல.262, கண்டி றோட்,
சாவகச்சேரி.

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்,**
இல. 103, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கி அருகில்)

(49345)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.